# மனிதனும் இறைவனும்

ஆண், பெண் அனைவரும் இயல்பிலேயே இறைநம்பிக்கை கொண்டவர்களாகவே பிறக்கின்றனர். மனித இன வளர்ச்சி மானுடவியல் (anthropology), மனோ தத்துவம் (psychology), வரலாறு, மதம் போன்ற அனைத்து ஆய்வுகளும் இறைநம்பிக்கை என்பது நினைவுக்கு எட்டாத காலத்தில் இருந்தே மனித இயல்புடன் இணைந்தே இருந்திருக்கின்றது என்பதை உணர்த்துகின்றன. உறுதியாக 'இறை' என்ற கருத்து மனிதனுக்கு மிக அத்தியாவசியமாகிறது (indispensable). உணர்வுடன் (அ) உணராமலோ இறை கருத்திற்கு தன் வாழ்வில் மிக முக்கியமான நிலையை கொடுக்க வலியுறுத்தப்படுகின்றான்.

வெளித்தோற்ற நாத்திகவாதிகள் கூட தங்களால் தாங்க இயலாத சில சிக்கலை சந்திக்கும் போது எவ்வித தயக்கமும் இன்றி என்னை காப்பாற்று! என்று இறைவனை அழைத்து விடுகின்றனர்.

ஆண், பெண் அனைவரும் இயல்பிலேயே இறைநம்பிக்கை கொண்டவர்களாகவே பிறக்கின்றனர்

இந்த விஷயத்தில் நன்கு அறியப்பட்ட எந்த ஒரு விதி விலக்கும் இல்லை.

மனிதன் தனது வாழ்க்கை பயணத்தை மன நிறைவுடனும் முழுமை பெற்ற உணர்வுடனும் தொடர்வதற்குதன் செயல்பாடுகளுக்கான தெளிவான ஒரு குறிக்கோள் தேவைப்படுகிறது.

அதே சமயம் மனிதன் விளக்கம் தேடும் ஒரு விலங்காக இருப்பதால் அவன் வாழ்விற்கும் தன்னை சுற்றியுள்ள உலகத்திற்கும் பின்னால் மறைந்திருக்கும் விளக்கங்களை தேட முயற்சிக்கின்றான்.

ஆனால் அவனுடைய குறுகிய எல்லை அவனை உதவி கிடைக்கப் பெறாதவனாக ஆக்கி விடுகிறது. உதவியற்ற இந்த நிலையில் அவனால் தனது இலக்குகளையும் தீர்மானித்துக் கொள்ள இயலாது. மனித வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தையும் விளங்கிக் கொள்ள இயலாது.

இயலாமை என்ற உணர்வை போக்குவதற்கு எல்லையற்ற இறைவனை ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

அனுபவம் நமக்கு தெரிவிப்பது என்னவெனில், பெரும்பாலான ஆண்களும் பெண்களும் நிறைவுறாத எதிர்ப்பார்ப்புகளுடனேயே வாழ்கின்றனர். நிறைவு செய்யும் நம்பிக்கையை இறைவன் மட்டுமே தர முடியும்.

இன்னும் சொல்லப் போனால் இறைவன் மனிதனுக்கு தரும் மிக முக்கியமான விஷயம் உறுதியான நம்பிக்கை (conviction) ஆகும். ஏனென்றால் மனிதன் தனக்குரிய இயல்பினால் மிகவும் உறுதியான நம்பிக்கையுடன் வாழ்க்கையை நடத்த விரும்புகிறான். இந்த நம்பிக்கைக்கான மூலாதாரம் இறைவனிடத்தில் இருந்தே தவிர வேறு எவரிடத்தில் இருந்தும் கிடைப்பதில்லை.

# இறைவன் மீது எங்கள் விசுவாசம்

எல்லா மனிதர்களும் பெண்களும் ஏதேனும் ஒரு வகையில் இறைநம்பிக்கை கொண்டுள்ளனர் என்பதை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

அவர்களின் 'நம்பிக்கை'யில் இருந்து எதிர்ப்பார்க்கின்ற விளைவை அவர்கள் ஏன் அடையவில்லை என்ற வினா தற்போது எழுகிறது.

- இறைநம்பிக்கையாளர்கள் முன் கூறப்படுகின்ற அவர்கள் தெய்வீக உந்துதல் (inspiration) மறுக்கப்படுகின்றார்கள் ஏன்?
- தங்கள் வீட்டு வாசலில் "கடவுள் துணை" என்று எழுதப்பட்ட பலகைகளை தொங்க விட்டுக் கொள்பவர்களுக்கு அந்த அருள் கிடைக்காமல் போவதற்கு என்ன காரணம்?
- தன்னை இறை நம்பிக்கையாளர்களாக காட்டிக் கொள்பவர்கள் மெய்யாகவே இறையருள் பெறாதது ஏன்?

நம்பிக்கையாளர் என்று கூறி கொள்வோருக்கும், இறைவனுக்கும் இடையில் அங்கீகரிக்கப்பட்ட தொடர்பு முறையை ஏற்படுத்திக் கொள்ள தவறியது தான் இதற்கு காரணம். ஆகவே இறை நம்பிக்கையாளர்களாக இருந்த போதிலும் அவர்களுடையது இறையருள் அற்ற வேதனைக்குரிய வாழ்க்கையாகி விடுகின்றது.

எல்லா மனிதர்களும் எதிர்க் கொள்ளும் பிரச்சனை இது தான்.

அனுபவம் நமக்கு தெரிவிப்பது என்னவெனில், பெரும்பாலான ஆண்களும் பெண்களும் நிறைவுறாத எதிர்ப்பார்ப்புகளுடனேயே வாழ்கின்றனர். நிறைவு செய்யும் நம்பிக்கையை இறைவன் மட்டுமே தர முடியும்.

கொள்கை ரீதியாக ஒவ்வொரு ஆணும், பெண்ணும் ஒரு கடவுள் அல்லது மற்றவை மீது நம்பிக்கை கொள்ளவே செய்கின்றனர்.

ஆனால் பெரும்பாலானவர்களுக்கு அந்த நம்பிக்கை பலனளிப்பதாக இருக்கவில்லை. எனவே இது அவநம்பிக்கை சார்ந்த பிரச்சனையல்ல; மாறாக இறை நம்பிக்கைக்கு கிடைக்கும் பிரதிப்பலனுள்ள குறைபாடு சார்ந்த பிரச்சனை என்பதை ஒவ்வொரு தனி நபரும் தனது சுய அனுபவங்களில் இருந்து புரிந்து கொள்ள இயலும்.

இது உலகளாவிய உண்மை ஆகும். இதை எந்த மனிதனும் தன் சுய வாழ்வின் நிகழ்வுகளை ஒன்றிணைத்து பார்க்கையில் மிக எளிதில் புரிந்துக் கொள்ள இயலும்.

இறை நம்பிக்கைக்கும் அந்த நம்பிக்கைக்கான விளைவிற்கும் மத்தியில் காணப்படும் இடைவெளிக்கு ஒரேயொரு காரணம் மட்டுமே இருக்க முடியும்.

அதாவது நம்பிக்கையாளர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் இறைவன் என்ற பெயரில் இறைவன் இல்லாத ஒன்றை வணங்குவதால் இருக்கலாம்.

அது போன்ற நிலையில் ஏதோ ஒரு இறைவன் மீது நம்பிக்கையிருந்தாலும் அவனோ / அவளோ இறை நம்பிக்கையின் பலனை பெறாமல் இருப்பார்கள் என்பது இயற்கையே.

தன்னை இறை நம்பிக்கையாளர்களாக காட்டிக் கொள்பவர்கள் மெய்யாகவே இறையருள் பெறாதது ஏன்?

இதற்கு காரணம் யாதெனில் மக்கள் பொதுவாக இறைவன் அல்லாத ஒன்றை அல்லது மற்றவற்றை இணைத்து (associate) கொள்வதே ஆகும்.

நாங்கள் 'இறைவனை நம்புகிறோம்' என்று அவர்கள் கூறினாலும் செயலில் அவர்கள் தெய்வமற்ற ஏதோ ஒன்றை சிறிது காலத்துக்கு முன்பு இறந்து போன மாமனிதர்களையோ வணங்குபவராக இருக்கிறார்கள். சில சமயங்களில் சூரியனோ அல்லது சந்திரனோ இறைவனாக நினைத்து வணங்கப்படுவது உண்டு.

சில சிறப்பு தன்மை கொண்ட மனிதர்களின் செல்வாக்கிற்கு மயங்கி தெய்வ நிலைக்கு அவர்களை உயர்த்துவது சாதாரணமாகி விட்டது. அதனால் இறை சிம்மாசனத்தை மனிதருக்கு கொடுத்து இறைவனின் இடத்தில் மனிதனை வைத்து விடுகிறார்கள்.

வேறு சில இடங்களில் இயற்கையான இயங்கியல் விதிகள் கடவுள் நிலைக்கு மாற்றி வைத்து விட்டனர். இன்னும் பலர் கடவுள் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான், மனிதனிலும் இருப்பான், உள்ளிருக்கும் ஆன்ம சக்தியைக் கொண்டு அதனிலும் அவனை காண முடியும் இறை தொடர்பும், இறையருளும் பெற்றுக் கொள்ள முடியும் என்கின்றனர்.

இதே போல சிலர் ஓரிறைக் கொள்கையை ஏற்றுக் கொண்டு அதை ஒரு கற்பனையான ஆன்மா என நினைக்கின்றனர். பிறகு அதனுடன் ஒரு வேளை தொடர்பு கொள்ள முடியும் என கருதுகின்றனர்.

# கடவுளை நாம் எப்படி தொடர்பு கொள்வது?

இந்த பிரச்சனைக்கு உள்ள ஒரு தீர்வு, நாம் அனைவரும் இந்த சிக்கலை முழுமையாக மறு ஆய்வு செய்வதில் அடங்கி உள்ளது.

நீங்கள் அதில் தீவிரமாக இருக்கும்பட்சத்தில், உங்களால் இறைக் கொள்கையை அதன் தூய வடிவில் அறிந்து கொள்ள முடியும். அதாவது இறைவன் ஒருவனே, உண்மை ஒன்று மட்டுமே, ஒரே இறைச்செய்தி மட்டுமே இருக்கும் என்பதை நன்கு அறிவீர்கள்.

இந்த பிரச்சனைக்கான தீர்வைத் தேடிய ஏராளமான அறிஞர்கள் இத்தலைப்பின் கீழ் குறிப்பிடத்தக்க ஆய்வுகளை மேற் கொண்டிருக்கின்றனர்.

அவர்களில் ஒருவர் வங்கத்தைச் சேர்ந்த முனைவர் நிதிஷ்காந்த் சத்தோபாத்யாமா ஆவார், 1904 ஆண்டு ஹைதராபாத் நகரில் இத்தலைப்பின் கீழ் அவர் ஆற்றிய உரை A Case of Discovery என்ற நூல் வடிவத்திலும் வெளி வந்துள்ளது. அதில் அவர் குறிப்பிடுவது :

“உண்மையான விஷயம் என்னவென்றால், கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்பு தோன்றிய எல்லா மதங்களும் ஒரு கடவுள் கொள்கையையே வலியுறுத்துகின்றன. எனினும் காலம் செல்ல செல்ல அக்கொள்கையைப் பின்பற்றி வந்தவர்களால் அதன் கருத்துக்களை பாதுகாக்க முடியாமல் போய் விட்டது.

எல்லா மதங்களிலும் மனிதனின் தலையீடும் புகுந்து விட்டன. அதனால் கடவுள் கொள்கை என்பது அதன் தூய வடிவத்தில் இல்லாத நிலை ஏற்பட்டு விட்டது

7ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இஸ்லாம் இந்த உலகில் மீண்டும் அறிமுகம் ஆனது. இஸ்லாம் கூட மற்ற மதங்களை போன்றது தான், ஆனாலும் ஒரு சிறப்பு தகுதி அதற்கு உண்டு. இது யாதெனில் விஞ்ஞான வளர்ச்சியின் பலனாலும் அச்சு இயந்திரம் மற்றும் காகிதம் ஆகியவற்றின் துணையால் இன்றளவும் அதன் கருத்துக்கள் உள்ளது உள்ளபடியே பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

எனவே இஸ்லாத்திற்குப் பிறகு வந்த தலைமுறைகளுக்கு கடவுள் கொள்கையின் தூய வடிவமாக இஸ்லாம் மட்டுமே இருந்து வருகின்றது. உண்மையான இறைக்கோட்பாட்டை அறிய, கடைபிடிக்க விரும்பும் தீவிரமான தேடல் கொண்ட அனைவருக்கும் குர்ஆனை வாசித்து, அதை புரிந்து கொள்வதை தவிர வேறு வழியில்லை.

## குர்ஆன் நிரந்தரமான அதிசயம்

இறை வேதமாகிய திருக்குர்ஆனின் கருத்துக்கள் :

இறைவன் ஒருவனே, அவனே படைப்பாளன், மனிதர்களுக்கும் இந்த பிரபஞ்சத்திற்கும் அவன் மட்டுமே அதிபதி, அவன் தான் இப்பிரபஞ்சத்திற்கான பாதுகாவலன், அவன் நித்ய ஜீவன், அவனால் காணவும் கேட்கவும் இயலும், மனிதனால் இறைவனை எந்த இடத்தில் இருந்து கொண்டும் எந்நேரத்திலும் நேரடியாக இடைத்தரகர்கள் யாருடைய துணையும் இன்றி தொடர்பு கொள்ள இயலும்

இறைவனால் மனிதனின் எல்லா குறைகளையும் நிவர்த்தி செய்ய இயலும். மரணத்திற்கு முந்தைய, பிந்தைய கால கட்டத்திலும் இறைவனே மனிதனைப் பராமரிக்கின்றான்.

இறைவன் ஆறுதல் மற்றும் சமாதானத்தின் வரம்பற்ற ஆதாரமாக உள்ளான். எல்லாவிதமான விவகாரங்களிலும் இறைவன் தன்னுடைய தூதர்கள் மூலமாக வழிகாட்டி இருக்கின்றான்.

மனிதனின் படைப்பாளனாகவும் பொறுப்பாளனாகவும் இருக்கின்ற இறைவன் தனது சட்ட திட்டங்களை முழுமையான முறையில் அறிந்தவனாக இருக்கின்றான்.அவன் மட்டுமே மனிதனின் அனைத்து விதமான எண்ணங்களையும் அறிந்த வனாகவும் இருக்கின்றான். எனவே அவனால் மட்டுமே மனிதர்களின் தேவைகளைப் புரிந்து கொள்ளவும் நிறைவேற்றித் தரவும் இயலும்.


> உண்மையான இறைக் கோட்பாட்டை அறிய, கடைபிடிக்க விரும்பும் தீவிரமான தேடல் கொண்ட அனைவருக்கும் குர்ஆனை வாசித்து, அதை புரிந்து கொள்வதை தவிர வேறு வழியில்லை.


அது போன்ற இறைவன் மட்டுமே மனிதர்களுக்கான இறைவனாக இருக்க முடியும். இந்த தகுதிகளைப் பெறாத வேறு எந்த ஆத்மாவாலும் மனிதனின் தேவைகளை நிவர்த்தி செய்து தர இயலாது.

இறைவனைப் பற்றி அறிந்து கொள்ள குர்ஆன் வாசித்து பார்த்த கோடானகோடி மக்கள் அது மனிதனின் இயற்கையான தேடலை எவ்வாறு நிறைவேற்றி வைக்கிறது என்பதை அறிந்து விட்டனர். அறிந்துக் கொண்டும் இருக்கிறார்கள்.

இதற்கு மாற்றமான கொள்கைகள் மனித இயல்பிற்கு பொருத்தமானதாக இல்லை என்பதையும் அவர்கள் ஒப்புக் கொண் டுள்ளனர். குர்ஆனில் கூறப்பட்டுள்ள இறைக் கொள்கை அறிமுக மாகிய போது தங்களது இதயங்கள் தங்களை அறியாமலேயே அழுது விட்டதாக கூறியுள்ளனர். குர்ஆன் கூறும் அந்த இறைவனால் மட்டுமே அவர்களுக்கு மனோ திருப்தியளிக்க முடிந்துள்ளது.

எனவே எவர் தனது வாழ்க்கை இறைவனை அடையும் பாதையில் வகுத்துக் கொள்ள விரும்புகிறாரோ அவர் குர்ஆனை வாசிப்பதன் மூலமாக மட்டுமே வெற்றியடைய முடியும்.

அதைத்தவிர வேறு எவ்விதமாகவும் இந்த உலகிலும், இறந்த பின்பு வர இருக்கும் நிரந்தரமான மறுவுலகிலும் எதையும் எதிர்ப்பார்க்க முடியாது.

**- மவுலானா வஹிதுத்தீன் கான்**


For more information, contact : TL 10

GOODWORD

324, Triplicane High Road,
Chennai - 600 005.
☎ +91-44-4352 4599
+91 97908 53944
✉ chennaigoodword@gmail.com


1, Nizamuddin West Market,
New Delhi - 110 013.
✉ info@goodwordbooks.com

goodwordbooks.com

www.alquranmission.org • www.wkhan.net
www.alrisala.org • www.cpsglobal.org

CPS International
centre for peace & spirituality


# மனிதனும் இறைவனும்



Man and God (Tamil)